**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ம் நாள் திங்கட்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் சித்திரை மாதம் 07ஆம் நாள்**
**அசல் வழக்கு எண்.862/2022**
**[CNR.No.TNDG190033052022]**
**(பழனி சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.566/2020)**
**[CNR.No.TNDG070011862020]**

முனியாண்டி ... வாதி

// எதிராக //

1. செந்தில்குமார் (இறப்பு)
2. சாந்தாமணி
3. மைனர்.அபிஸ்ரீ
4. மைனர்.அஸ்வின்கார்த்திக் ... பிரதிவாதிகள்

(மைனர்கள் 3, 4 பிரதிவாதிகளுக்கு தாயாரும் கார்டியனுமான 2ம் பிரதிவாதி)

(இ.ம.எண்.142/2023 மனுவில் கடந்த 24.03.2023ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி 1ம் பிரதிவாதியின் வாரிசுகளான 2 முதல் 4 பிரதிவாதிகள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.)

இந்த வழக்கானது கடந்த 19.11.2020ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 10.12.2020ஆம் தேதி மாண்புமிகு பழனி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.566/2020 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு ஆள்வரை எல்லையின் காரணமாக மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல் அவர்களின் அ.எண்.137/21/ஏ1. தேதி 15.12.2021ம் தேதிய உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.862/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னர் கடந்த 18.04.2026ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.R.முருகானந்தம் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி இறந்து விட்ட நிலையில், அவரது வாரிசுகளான 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.M.சிவசாமி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத

காரணத்தினால் கடந்த 02.02.2024ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டும், 3, 4 பிரதிவாதிகளின் பாதுகாவலரான 2ம் பிரதிவாதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டுள்ள நிலையில், 3, 4 மைனர்கள் தரப்பில் நீதிமன்ற பாதுகாவலர்/வழக்குரைஞராக வழக்குரைஞர் திரு.S.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையாகியும், வழக்குரை, எதிர்வழக்குரை, சாட்சியங்கள், சான்றாவணங்கள், வழக்குகோப்பு ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டும், நாளதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**1.** அசல் வழக்கானது தாவா தொகை, பின்வட்டி மற்றும் செலவுதொகை இறந்து போன 1ம் பிரதிவாதியின் எஸ்டேட் சொத்தில் இருந்து அவரது வாரிசுகளான 2 முதல் 4 பிரதிவாதிகள் செலுத்தி வைக்க வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி தாக்கல் செய்த வழக்குரை சுருக்கம் :**

வாதியும், பிரதிவாதியும் பல ஆண்டுகளாக நல்ல பழக்கவழக்கமுள்ள நபர்களாவார்கள். வாதி விவசாய கிணறுகளில் மோல்டு போடும் தொழிலில் செய்து வருகிறார். பிரதிவாதி ஹாலோபிளாக் தயாரிக்கும் தொழில் செய்து வருகிறார். வாதியிடம் பிரதிவாதி அவரது அவசர நிமித்தம் தொழில் அபிவிருத்திக்காகவும், விவசாய செலவினங்களுக்காகவும் கடனாக ரொக்கம் ரூ.5,00,000/– தொகையை கடந்த 04.09.2019ம் தேதி வாதியின் வீட்டில் வைத்து சாட்சிகள் முன்னிலையில் பெற்றுக்கொண்டு, அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100/–க்கு வட்டி ரூபாய் ஒன்று வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியும், அசலையும் வேண்டும்போது வாதிக்காவது அல்லது வாதியின் உத்தரவு பெற்றவருக்காவது செலுத்துவதாக கூறி தாவா கடனுறுதிசீட்டை வாதியின் பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளார். கடனுறுதிசீட்டிற்கான அசல் மற்றும் வட்டி செலுத்தாமல் இருந்து வந்து கடந்த 24.05.2021ஆம் தேதி 2 முதல் 4 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்துவிட்டார். எனவே, வாதியிடம் 3, 4 பிரதிவாதிகளின் தந்தையான இறந்து போன 1ம் பிரதிவாதி செந்தில்குமார் என்பவரின்

சொத்துக்களை வாரிசு என்ற அடிப்படையில் பிரதிவாதிகள் அனுபவித்து வருவதால், வாதிக்கு தாவா கடனுறுதிசீட்டில் கண்ட அசல் தொகையும், வட்டியையும் சேர்த்து 1ம் பிரதிவாதி விட்டுச்சென்ற சொத்துக்கள் வழியாக பிரதிவாதிகள் செலுத்தக்கோரி வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம் :**

வழக்குரையில் 3, 4 பிரதிவாதிகளால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்ற சங்கதிகள் மறுக்கப்படுகிறது. வாதியின் வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனாரான செந்தில்குமார் மைனர்களின் நலனுக்காகவோ, கடனை தீர்ப்பதற்காகவோ, குடும்ப செலவிற்காகவோ யாதொரு தொகையும் வாதியிடம் பெறவில்லை. தாவா கடனுறுதிசீட்டு எதுவும் வாதிக்கு எழுதிக்கொடுக்கவில்லை. 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனார் போல் போர்ஜரியாக கையெழுத்தை உற்பத்தி செய்து வழக்கை தாக்கல் செய்துள்ளார். மைனர் பிரதிவாதிகளின் தந்தை உயிருடன் இருக்கும்போது தொகை சம்மந்தமாகவோ கடனுறுதிசீட்டு சம்மந்தமாகவோ மைனரின் நலனுக்காக எவ்வித தொகை பெறப்பட்டதாக மைனரிடமோ 2ம் பிரதிவாதியிடமோ தகவல் தெரிவிக்கவில்லை. மேலும் வாதி தனது வழக்கறிஞர் வழியாக அறிவிப்பு அனுப்பியுள்ளதாக சொல்லியுள்ளது குறித்து இந்த மைனர்களுக்கு எந்த விபரங்களும் தெரியாது. வாதி குறிப்பிடும் தேதியில் 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனார் யாரிடமும் எவ்வித தொகையும் பெறவில்லை. கடனுறுதிசீட்டையும் எழுதிக்கொடுக்கவில்லை. 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனார் காலஞ்சென்ற செந்தில்குமார் வாங்கியதாக கூறியுள்ள தொகையை அவரது இன்டஸ்டேட்டாக உள்ள மைனர் செலுத்த கடமைப்பட்டுள்ளார் என்று கூறியுள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. 2,3,4 பிரதிவாதிகளின் பொருளாதார நெருக்கடியை வாதி தெரிந்து கொண்டு பணம் அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதிக்கு வேண்டிய சிலரின் உதவியுடன் தாவா கடனுறுதிசீட்டை உற்பத்தி செய்து, இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால், வாதியின் வழக்கை 3, 4 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து கடந்த 12.02.2026ஆம் தேதி கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.**

**1. இறந்து போன செந்தில்குமார் என்பவரின் கையெழுத்தினை போர்ஜரியாக உற்பத்தி செய்து வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது சரியா ?**

**2. கடந்த 04.09.2019ம் தேதியில் தாவா கடனுறுதிசீட்டினை வாதிக்கு, இறந்து போன செந்தில்குமார் அவர்கள் எழுதிக்கொடுத்ததின் அடிப்படையில் தாவா தொகை, வட்டி, பின்வட்டி செலவு தொகை ஆகியவைகளை செந்தில்குமார் விட்டு சென்ற சொத்துக்கள் வழியாக வாதிக்கு, பிரதிவாதிகள் செலுத்த கடமைப்பட்டவர்களா ?**

**3. வாதிக்கு கிடைக்கத்தக்கத இதர பரிகாரம் என்ன?**

**5.** வாதி தரப்பில், வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து, வா.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்தும், கடனுறுதிச்சீட்டை எழுதியதும், சாட்சியுமாக கையெழுத்து செய்துள்ள சுரேஷ் என்பவர் வா.சா.2 ஆக விசாரித்தும், கடனுறுதிசீட்டில் சாட்சியாக கையெழுத்து செய்துள்ள மணிகண்டன் என்பவர் வா.சா.3 ஆக விசாரித்தும், பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுப்படுத்தாமல் வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**6. பிரச்சனைக்கான தீர்வுகள் :**

**1. எழுவினா 1க்கான தீர்வு : இறந்து போன செந்தில்குமார் என்பவரின் கையெழுத்தினை போர்ஜரியாக உற்பத்தி செய்து வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது சரியா ?**

**1.1.** 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனாரான இறந்து போன செந்தில்குமார், கடந்த 04.09.2019ஆம் தேதியில் வாதியிடமிருந்து, அவரது அவசர நிமித்தம், தொழில் அபிவிருத்திக்காகவும், விவசாய செலவினங்களுக்காகவும் கடனாக ரூ.5,00,000/- ரொக்கம் பெற்றுக்கொண்டு கடனுறுதிசீட்டை எழுதிக்கொடுத்து விட்டு, தொகை செலுத்தாமல் கடந்த 24.05.2021ஆம் தேதி செந்தில்குமார் இறந்து விட்டதாகவும், பிரதிவாதிகளை கடனுறுதிசீட்டின் பேரிலான தொகையை செலுத்தும்படி வாதி

பலமுறை கேட்டும் தொகையை திருப்பி செலுத்தவில்லை என்றும், எனவே, தாவா கடனுறுதிசீட்டுக்குண்டான தொகையினை 1ம் பிரதிவாதி விட்டு சென்ற சொத்துக்கள் வழியாக 2 முதல் 4 பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்று வாதி தரப்பில் வழக்கானது முன்னெடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

**1.2.** வாதியிடம், இறந்துபோன செந்தில்குமார் 3, 4 மைனர்களின் நலனுக்காகவோ, கடனை தீர்ப்பதற்காகவோ, குடும்ப செலவிற்காகவோ யாதொரு தொகையும் வாதியிடம் பெறவில்லை என்றும், தாவா கடனுறுதிசீட்டு எதுவும் வாதிக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றும், பிரதிவாதிகளிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பிரதிவாதிகளின் தகப்பனாரின் கையெழுத்தை மோசடியாக உற்பத்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என பிரதிவாதிகள் தரப்பில் வழக்கானது முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

**1.3.** வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள வாசா.ஆ1 ஆவணமான கடனுறுதிசீட்டில் 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனாரின் கையெழுத்தை போல் மோசடியாக கடனுறுதிசீட்டை உற்பத்தி செய்து வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையில் ஒருநிலைப்பாடு எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் எதிர்வழக்குரையில் எடுக்கப்பட்டுள்ள நிலைப்பாட்டை நிரூபிக்க வேண்டிய பொறுப்பானது எவரை சார்ந்தது என்று பார்க்கும்போது, " **இந்திய சாட்சிய சட்டம், 1872 பிரிவு 101க்கு நிகரான பாரதிய சாட்சிய சட்டம், 2023 பிரிவு 104ல் சட்டப்படியான உரிமை அல்லது கடப்பாடு எதையேனும், பற்றி நீதிமன்றம் தீர்ப்பு கொடுக்க வேண்டும் என்று ஒருவர் கோருகின்றபோது, அந்த உரிமை அல்லது கடப்பாடு அது அவர் கூறுகிற சங்கதிகளின் உண்மையை பொறுத்திருக்குமேயானால், அவர் அந்த சங்கதிகளின் உண்மையை நிரூபித்தல் வேண்டும். மேலும், பாரதிய சாட்சிய சட்டம், 2023 பிரிவு 105ல்** நிரூபிக்கும் பொறுப்பு எவரை சார்ந்து : (**On whom burden of proof lies**) உரிமை வழக்கு நடவடிக்கை ஒன்றில் நிரூபிக்கும் சுமையானது, இருதரப்பிலும் சாட்சியம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால், எவர் தோற்றுப்போய்விடுவாரோ அவரைச்சார்ந்ததாக இருக்கும் என்று சட்ட

நிலைப்பாடு உள்ளது. இந்நிலையில், எடுத்துக்காட்டு ஆ–வில், ஆவணமொன்றின் பேரில் கொடுபட வேண்டிய பணத்திற்காக "ஆ"**மற்றும்** மீது "அ" வழக்கிடுகிறார். ஆவணம் கொடுக்கப்பட்டதென்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் அது மோசடியாக பெறப்பட்டது என்று "ஆ" கூறுகிறார். அதை "அ" மறுக்கிறார். இருதரப்பிலுமே சாட்சியம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால், "அ" வெற்றி பெறுவார். காரணம் ஆவணம் பற்றி தகராறு எதுவுமில்லை என்பதோடு மோசடியும் நிரூபிக்கப்படவில்லை என்பதுதான். எனவே நிரூபிக்கும் சுமை "ஆ" வை சார்ந்ததாகும் என்று சட்ட நிலைப்பாடு உள்ளது.

**1.4.** இவ்வழக்கை பொறுத்து 3, 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் இறந்து போன செந்தில்குமார் கடனுறுதிச்சீட்டினை எழுதிக்கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ள நிலையில், கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பம் இறந்து போன செந்தில்குமார் என்பவரின் கையொப்பம் அல்ல என்பதை நிரூபிக்க வேண்டிய சுமையானது இந்திய சாட்சிய சட்டம், 1872 பிரிவு 102ன்படி பிரதிவாதிகளை சார்ந்ததாகும்.

**1.5.** வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகள் மற்றும் வாதியின் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாணப்பத்திரிக்கையில், கடனுறுதிசீட்டினை வாதியின் பெயருக்கு இறந்து போன செந்தில்குமார் என்பவர் எழுதிக்கொடுத்துள்ளதாக சரத்துக்கள் கண்டுள்ள நிலையில், வா.சா.1 என்பவரை பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை மேற்கொண்டபோது,**"பணம் கொடுத்ததாக சொல்லக்கூடிய நிலையில் யாரிடம் பணம் கொடுத்தேன் என்றால் ? செந்தில் குமாரிடம் பணம் கொடுத்தேன். செந்தில் குமார் உயிருடன் இருக்கிறாரா என்றால் ? இறந்துவிட்டார். நான் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு பணம் கொடுத்தேன் என்றால் ? 04.09.2019ம் தேதி பணம் கொடுத்தேன். நான் பணம் கொடுக்கும்போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் ? சுரேஷ் மற்றும் மணிகண்டன் ஆகியோர்கள் இருந்தார்கள். சுரேஷ், மணிகண்டன் ஆகியோர்கள் உறவினரா என்றால் ? எனக்கு தெரிந்தவர்கள். நான் செந்தில்குமாருக்கு வங்கியின் மூலமாக பணம் கொடுத்தேனா என்றால் ? கையில் இருந்ததை வீட்டில் வைத்து**

**கொடுத்தேன். பணம் எத்தனை ரூபாய் தாள்களாக கொடுத்தேன் என்றால் ? ரூ.500 ரூபாய் தாள்களாக கொடுத்தேன். 500 ரூபாய் தாள்கள் எத்தனை தாள்கள் கொடுத்தேன் என்றால் ? 10 கட்டுகள் 500 ரூபாய் தாள்களாக கொடுத்தேன். இந்த வழக்கில் செந்தில்குமார் இறந்த பின்பு இவ்வழக்கின் 2, 3 பிரதிவாதிகள் உடன் இருந்தார்களா என்றால் ? அவர்கள் இல்லை. அவரது அப்பா தான் வாங்கினார்."** என்று சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார். மேற்கண்ட வா.சா.1 என்பவரின் சாட்சியத்தின் தன்மைப்படி வாதியிடம், இறந்து போன செந்தில்குமார் என்பவர் வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டின் பேரில் கடன் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

**1.6.** வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டை எழுதிய நபரான வா.சா.2 என்பவரை 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை மேற்கொண்டபோது, **" நான் எந்த வழக்கிற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ? பணம் முனியாண்டி என்பவர் செந்தில்குமாருக்கு கொடுத்துள்ளார். அதற்காக சாட்சியம் அளிக்க முன்னிலையாகியுள்ளேன். எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு பணம் கொடுக்கப்பட்டது என்றால் 04.09.2019ம் தேதி கொடுக்கப்பட்டது. செந்தில்குமார் என்பவர் பணம் வாங்கியதற்கு ஆதரவுக்கு ஏதேனும் கொடுத்துள்ளாரா என்றால் ? புரோநோட்டில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். வெற்று கடனுறுதிசீட்டில் தான் கையொப்பம் செய்து கொடுத்தாரா என்றால் ? ஸ்டாம்ப் ஒட்டப்பட்டு அதன் மீது ஆங்கிலத்தில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். கடனுறுதிசீட்டில் கைரேகையும் வைத்தார். கடனுறுதிசீட்டு எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் ? 04.09.2019ம் தேதி எழுதப்பட்டது. பணம் கொடுத்த போதே கடனுறுதிசீட்டு எழுதப்பட்டது என்றால் ? ஆமாம். கடனுறுதிசீட்டை யார் எழுதினார்கள் என்றால் ? நான் தான் எழுதினேன். கடனுறுதிசீட்டில் என்ன காரணத்திற்காக தொகை கொடுத்ததாக சரத்து கண்டு கடனுறுதிசீட்டு எழுதினேன் என்றால் ? விவசாய செலவிற்காகவும், குடும்ப செலவிற்காகவும் சரத்து கண்டு எழுதினேன். மேற்படி விபரத்தை என்னிடம் செந்தில்குமார் தான் சொன்னார்."** என்று சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார். வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டினை வா.சா.2 என்பவரின் சாட்சியத்துடன் ஒருங்கியல்பாக ஒப்பிட்டு பார்க்கும்போது, கடனுறுதிசீட்டு எழுதியவரின் கையொப்பமும்,

கடனுறுதிசீட்டில் கண்டுள்ள வாசகங்களும் ஒரே மாதிரியாக உள்ளதை அறிய முடிகிறது.

**1.7.** வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டில் சாட்சியாக கையெழுத்து செய்துள்ள வா.சா.3 என்பவரை 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை மேற்கொண்டபோது,**"நான் எந்த வழக்கிற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ? முனியாண்டி என்பவர் செந்தில்குமார் என்பவருக்கு வட்டிக்கு பணம் கொடுத்திருந்தார் அதானால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். முனியாண்டி என்பவர் அனைவருக்கும் வட்டிக்கு பணம் கொடுக்க கூடிய நபர் என்றால் ? இல்லை. செந்தில்குமார் என்பவருக்கு எத்தனை ரூபாய் வட்டிக்கு பணம் கொடுத்தார் என்றால் ? தொகை ரூ.5,00,000/- பணம் கொடுத்தார். அதற்கு 100க்கு ரூ.1 ரூபாய் வட்டிக்கு பணம் கொடுத்தார். கடனுறுதிசீட்டில் நான் எத்தனாவது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால்? நான் மட்டும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். சாட்சி கையொப்பம் போட என்னை யார் வரச் சொன்னார்கள் என்றால் ? செந்தில்குமார் என்பவர் தான் என்னை வரச் சொன்னார். செந்தில்குமார் என்னை எங்கு வரச்சொன்னார் என்றால் ? முனியாண்டி வீட்டிற்கு வரச் சொன்னார். நான் அங்கு சென்றேன். என்ன விபரம் என்று சொல்லி அழைத்தாரா என்றால் ? ஆமாம். பணம் கடன் வாங்குவதாக சொல்லி தான் அழைத்தார். கடனுறுதிசீட்டு எழுதியபோது நான் உடன் இருந்தேனா என்றால் ? ஆமாம். நானும் சுரேஷ் என்பவரும் கையொப்பம் செய்தோம். செந்தில்குமாரும் தாவா கடனுறுதிசீட்டில் கையொப்பம் செய்துள்ளார். செந்தில்குமார் தாவா கடனுறுதிசீட்டில் கையொப்பம் மட்டும் தான் செய்தாரா என்றால் ? கையொப்பம் செய்து, கைரேகையும் வைத்தார். எந்த கை விரலில் ரேகை வைத்தார் என்றால் ? இடது கை பெருவிரல் ரேகை வைத்தார்."** என்று சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார். மேற்கண்ட வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகள் தாவா கடனுறுதிசீட்டு எழுதப்பட்ட விதத்தை பற்றி சாட்சியம் அளித்துள்ள நிலையில், தாவா கடனுறுதிசீட்டு வாதியால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்பதை பொறுத்து குறுக்கு விசாரணை வழியாக வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகளை 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் நிராகரிக்கவில்லை.

**1.8.** தாவா கடனுதிசீட்டான வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டில் தொகை ரூ.5,00,000/- என குறிப்பிட்டு வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள நிலையில், தொகை ரூ.5,00,000/- என்பது சாதாரணத்தொகை கிடையாது, மிக உயர்மதிப்புடைய பெரிய தொகையாகும். சாதாரணமாக ஒரு நபர் மற்றொரு நபர் மீது பெரிய தொகையை கடனாக பெற்றுக்கொண்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், அந்த வழக்கினால் பாதிக்கப்பட்ட நபர் அந்த தொகையினை, உண்மையிலுமே பெறாமல் இருக்கும்பட்சத்தில் உடனடியாக, தாவா கடனுறுதிசீட்டில் உள்ள கையெழுத்து இறந்து போன செந்தில்குமார் என்பவருடைய கையெழுத்து அல்ல என்பதை நிரூபிக்க கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெறுவதற்கு நடவடிக்கை எதுவும் மேற்கொண்டிருப்பார். 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் அவ்வாறு எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, தாவா கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பம் இறந்து போன செந்தில்குமார் என்பவருடைய கையொப்பம் அல்ல என்று 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் சொல்லியுள்ள நிலைப்பாட்டினை பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே, தாவா கடனுறுதிசீட்டான வா.சா.ஆ.1 ஆவணம் போர்ஜரியாக உற்பத்தி செய்யப்பட்டது என்று தீர்மானிக்க இயலாது.

**2. எழுவினா 2க்கான தீர்வு : கடந்த 04.09.2019ம் தேதியில் தாவா கடனுறுதிசீட்டினை வாதிக்கு, இறந்து போன செந்தில்குமார் அவர்கள் எழுதிக்கொடுத்ததின் அடிப்படையில் தாவா தொகை, வட்டி, பின்வட்டி செலவு தொகை ஆகியவைகளை செந்தில்குமார் விட்டு சென்ற சொத்துக்கள் வழியாக வாதிக்கு, பிரதிவாதிகள் செலுத்த கடமைப்பட்டவர்களா ?**

**2.1.** வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள வா.சா.1 முதல் வா.சா.3 ஆகிய சாட்சிகள் முன்னிலைப்படுத்தியுள்ள சாட்சியத்தில், வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பம் இறந்துபோன செந்தில்குமார் என்பவருடையது என்று சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார்கள். வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பம் இறந்துபோன செந்தில் குமார் என்பவரின் கையொப்பம் அல்ல என்று 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்காத நிலையில், வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டானது

இறந்துபோன செந்தில்குமார் என்பவரால் வாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. இந்நிலையில். இறந்துபோன செந்தில்குமார் என்பவரால் எழுதிக்கொடுக்கப்பட்ட வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டானது தகுந்த மறுபயனுக்கு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளதா? என்று தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது. இந்நிலையில், மாற்றுமுறை ஆவண சட்டம் 1881, பிரிவு – 118(அ)ன் கீழாக மாற்றுமுறை ஆவணம் ஒவ்வொன்றும் தகுந்த மறுபயனுக்காகவே ஏற்கப்பட்டது என்று அனுமானிக்க வேண்டும் என்று சட்டநிலைப்பாடு உள்ளது. தகுந்த மறுபயனுக்காகவே வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டு எழுதிக்கொடுக்கப்பட்டதாக அனுமானிக்க வேண்டியுள்ளது. தகுந்த மறுபயனுக்காக கடனுறுதிசீட்டு எழுதிக்கொடுக்கப்பட்டதாக உள்ள நிலையில், அதை உண்மையான மறுபயனுக்கு எழுதிக்கொடுத்ததாக அனுமானங்கள் எழுகிறது. மேற்படி அனுமானம் மறுத்தலிக்கக்கூடிய அனுமானமாக உள்ளது. அனுமானத்தை மறுத்தலிக்க முடியாத அனுமானம் கிடையாது. பிரதிவாதிகள் சட்டப்படி அனுமானத்தை மறுத்தலித்துள்ளரா? என்று பார்க்க வேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு பார்க்கும்போது, மறுத்தலிப்பானது பிரதிவாதிகளால் இரண்டு வகைகளில் மறுத்தலிக்கலாம். முதலாவதாக, வாதி மற்றும் வாதி தரப்பில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ள சாட்சியங்களை, பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்தும் மற்றும் வாதி கொடுத்துள்ள ஆவணத்தின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கியும் மறுத்தலிக்கலாம். இரண்டாவதாக, பிரதிவாதிகள் தரப்பில் சில சாட்சியங்கள், சான்றாவணங்கள் கொடுத்து அதை மறுத்தலிக்கலாம்.

**2.2.** வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகளை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை மேற்கொண்டபோது, வாதி தரப்பு சாட்சியத்தை கேள்விக்குறியாக்கி, பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள தன்னுடைய வழக்கை நிரூபித்துள்ளாரா ? என்பதை பார்க்கும்போது, வா.சா.1 என்பவர் தனது முதன்மை சாட்சியத்தில், கடந்த 04.09.2019ம் தேதி தனது வீட்டில் வைத்து சாட்சிகள் முன்னிலையில் கடனாக ரொக்கம் ரூ.5,00,000/– பெற்றுக்கொண்டு, வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டில் கையொப்பம் செய்து கொடுத்துள்ளதாக சாட்சியம்

முன்னிலைப்படுத்தியுள்ள நிலையில், மேற்படி சங்கதியை வா.சா.1 என்பவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொண்ட வகையில் வாதியின் வழக்கை மறுதளிக்கவில்லை.

**2.3.** வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கடனுறுதிசிட்டினை மறுத்தலிக்கும்விதமாக, பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்களை முன்னிலைப்படுத்தி மறுத்தலிப்பானது நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்று பார்க்கும்போது, வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டு ஏற்பட்ட விதம், வாதிக்கும், இறந்துபோன செந்தில்குமார் என்பவருக்கும் இடையே கடனுறுதிசீட்டில் கண்டுள்ள தொகை செல்லான விதம் (Passing of consideration) ஆகியவைகள் குறித்து, பிரதிவாதிகள் தரப்பில் வாதியின் வழக்கை மறுத்தலிக்கும் விதமாக நம்பத்தன்மை வாய்ந்த ஆவணங்களை முன்னிலைப்படுத்தவில்லை. வாதி மற்றும் வாதி தரப்பு சாட்சிகளை குறுக்குவிசாரணை மேற்கொண்டபோதும், பிரதிவாதிகள் தரப்பில் அனுமானத்தை மறுத்தலிக்காத நிலையில், பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் எடுக்கப்பட்டுள்ள நிலைப்பாட்டிற்குரிய கூற்றானது நிகழ்தற்குரிய நிகழ்வாக (Preponderance of Probabilities) இருக்குமா? என்று பார்க்கும்போது, பிரதிவாதிகளின் கூற்றுப்படி சொல்லியுள்ள சங்கதிகள் இந்த வழக்கில் நடத்திருக்கக்கூடிய மற்றும் நிகழ்தற்குரிய நிகழ்வாக இருக்க வாய்ப்பில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**2.4.** பிரதிவாதிகள் தரப்பில் வாதியின் வழக்கை நிராகரிக்கும் வகையில் எவ்வித ஆவணங்களும் முன்னிலைப்படுத்தி வாதியின் வழக்கை மறுத்தலிக்கவில்லை. வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் இறந்துபோன செந்தில்குமார் அவரது அவசர நிமித்தமாகவும், குடும்ப செலவிற்காகவும், விவசாய செலவிற்காகவும் வாதியிடம் பெற்று கடன் தொகையை திருப்பிச்செலுத்துவதற்கு முன்பாக செந்தில்குமார் இறந்துள்ள நிலையில், செந்தில்குமார் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அவரது சட்டப்படியான வாரிசுகளுக்கு சென்றடையும். 2 முதல் 4 பிரதிவாதிகள் இறந்துபோன செந்தில்குமார் என்பவரின் வாரிசுகள் என்ற அடிப்படையில், அவர் விட்டுச்சென்ற அசையா சொத்துக்கள் வழியாக பிரதிவாதிகளிடமிருந்து தொகையினை வசூலிக்க வாதிக்கு உரிமையுள்ளது.

இந்நிலையில், பிரதிவாதிகள் மீது தனிப்பட்ட முறையில் தீர்ப்பாணை வழங்க இயலாது. அசல் வழக்கை பொறுத்து முழுவதுமான நீதிமன்ற கட்டணத்தை வாதி செலுத்தியுள்ளார். வழக்கிற்கான வழக்குமூலம் வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை நிரூபிக்கும்விதமாக 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

**2.5.** இவ்வழக்கின் அனைத்து சூழ்நிலைகளையும் ஒருங்கியல்பாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனாரான செந்தில்குமார் என்பவர் வாதியிடமிருந்து, கடனாக ரூ.5,00,000/– தொகையை பெற்றுக்கொண்டு, கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்பது வா.சா.ஆ.1 சான்றாவணத்தின் வழியாகவும், வா.சா.1 முதல் வா.சா.3 சாட்சியங்களின் வழியாகவும் வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் பிரதிவாதிகள் இறந்துபோன செந்தில்குமார் என்பவரின் சட்டப்படியான வாரிசுகளாக உள்ள நிலையில், இறந்துபோன செந்தில்குமார் என்பவர் விட்டுச்சென்ற சொத்துக்கள் வழியாக 2 முதல் 4 பிரதிவாதிகளிடமிருந்து, வாதி தாவா தொகை மற்றும் பின்வட்டி பெற உரிமையுடையவர் என்று தீர்மானிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**3. எழுவினா–3க்கான தீர்வு : வாதிக்கு கிடைக்ககூடிய இதர பரிகாரம் என்ன?**

தாவா தொகை வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று மேலே கண்ட எழுவினாக்களில் தீர்மானித்துள்ள நிலையில், இறந்துபோன செந்தில்குமார் உரிய காலத்தில் வாதியிடம் பெற்ற தொகையினை திரும்ப செலுத்தாததால் வாதி வழக்கு தாக்கல் செய்ய நேரிட்டது. எனவே, வழக்கின் செலவுத்தொகையினை வாதிக்கு, இறந்துபோன செந்தில்குமார் என்பவரின் வாரிசுகள் அவர் விட்டு சென்ற சொத்துக்கள் வழியாக 2 முதல் 4 பிரதிவாதிகள் செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள். வாதி கோரியுள்ள வட்டிவிகிதமானது வாதிக்கு உரிமையியல் விசாரணைமுறைச்சட்டம் பிரிவு 34–ன் கீழாக கிடைக்கத்தக்கது. இந்நிலையில், வா.சா.ஆ1 ஆவணமான கடனுறுதிச்சீட்டில்

அசல் தொகைக்கு மாதம் 1க்கு ரூ.100க்கு ரூ.1/− வீதம் மட்டுமே வட்டி கேட்கப்பட்டுள்ளது. தாவா தொகை ரூ.5,72,333/− தொகையினையும், அசல் தொகை ரூ.5,00,000/−த்திற்கு தாவா தாக்கலான நாள் முதல் தீர்ப்பாணை நாள் வரை ஆண்டொன்றுக்கு 9% வட்டியும், பின்னிட்டு தீர்ப்பு நாள் முதல் தொகை செல்லாகும் நாள் வரை ஆண்டொன்றுக்கு 6% வட்டியும், வழக்கின் செலவுத்தொகையும் வாதிக்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் இறந்துபோன செந்தில்குமார் என்பவர் விட்டுச் சென்ற அசையாச்சொத்துக்கள் வழியாக செலுத்த வேண்டும் என தீர்ப்பாணை பிறப்பிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

7. முடிவில்,

**தாவா தொகை ரூ.5,72,333/− தொகையினையும், அசல் ரூ.5,00,000/− தொகைக்கு தாவா தாக்கல் செய்த 19.11.2020ம் நாள் முதல் தீர்ப்பு நாளான 20.04.2026 ஆம் நாள் வரை ஆண்டொன்றுக்கு 9% வட்டியும், பின்னிட்டு தீர்ப்பு நாள் முதல் தொகை செல்லாகும் நாள்வரை ஆண்டொன்றுக்கு 6% வட்டியும், செலவுத்தொகையும் சேர்த்து வாதிக்கு, 2 முதல் 4 பிரதிவாதிகள் இறந்துபோன செந்தில் குமார் என்பவர் விட்டுச்சென்ற அசையா சொத்துக்கள் வழியாக செலுத்த வேண்டும் என வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.04.20 16:50:45 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

**வாதி தரப்பு சாட்சிகள் :**

| | | | | |
|---|---|---|---|---|
| வா.சா.1 | – | முனியாண்டி | – | வாதி |
| வா.சா.2 | – | சுரேஷ் | – | சாட்சி |
| வா.சா.3 | – | மணிகண்டன் | – | சாட்சி |

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :**

| | | | |
|---|---|---|---|
| 1 | 04.09.2019 | வாதிக்கு செந்தில்குமார் எழுதிக்கொடுத்ததாக சொல்லக்கூடிய கடனுறுதிசீட்டு - அசல் | வா.சா.ஆ.1 |

**3,4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி : இல்லை**

**3, 4 பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை**

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.04.20 16:50:51 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**